UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தொல்காப்பிய அகத்திணை மரபும் இறையனார் களவியலும்

**இரா. பிரசன்னா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்
ORCID ID : 0009-0008-9686-6883

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கண மரபில் எண்ணற்ற இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றில் முதலில் தோன்றிய நூல் என எந்த இலக்கண நூல்களையும் அறுதியிட்டுக் கூற இயலாது. தமிழில் கிடைக்கூடிய முழு முதற் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இவ்விலக்கணம் மூன்று அதிகாரங்களைக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது அதில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகமரபுக்குறித்து அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்னும் நான்கு இயல்களை கட்டமைத்துச் சென்றுள்ளார். இவற்றில் விடுப்பட்ட செய்திகளை பொருளியலிலும் விளக்கி அக இலக்கணத்தைக் குறிப்பிட்டு சென்றுள்ளமை சிறப்புடைய தாகும். தொல்காப்பிய அகஇலக்கண மரபிணைப்போல இறையனார் களவியல் ஆசிரியர் இரண்டு இயல்களின் வழி இலக்கண மறபிணை கூறியுள்ளார். இவ்விலக்கண மரபிணை நுண்ணிதின் ஆராய்வதே நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

களவு, கற்பு, தொல்காப்பியம், இறையனார்.

**முன்னுரை**

தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள அகத்திணையியல் சார்ந்த பதிவுகள் களவியலில் பதிவாகாமல் உரையிலேயே இடம் பெற்றுள்ளன. இறையனார் களவியலானது கற்பியலை விட களவுக்கே இன்றியமையாத இடத்தை வழங்கியுள்ளது. களவியல் உரையாசிரியரால் முதல் நூல் என கட்டமைக்கப்பட்ட இறையனார் களவியலானது தொல்காப்பியத்தைப் பின்பற்றிய வழி நூலாக அமைகின்றதா அல்லது முதல் நூலுக்குரிய தனித்த செய்திகளைக் கொண்டு அமைகின்றதா என்பதை விளக்கும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**தொல்காப்பியரும் இறையனாரும்**

தொல்காப்பியத்துக்குப் பிறகு கிடைக்கப்பெறும் முழு இலக்கண நூல் இறையனாரகப் பொருள் என்னும் இறையனார் களவியல் ஆகும். தொல்காப்பியம் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்களில் 212 சூத்திரங்கள் மூலமும், மெய்ப்பாட்டியல், உவமையியல்,செய்யுளியல் ஆகிய இயல்களிலும் அகமரபுகளைக் கூறுகிறது. தொல்காப்பியத்தைப் பெரும்பான்மையாகப் பின்பற்றிய இறையனார் களவியல் அறுபது சூத்திரங்கள் மூலம் அகப்பொருள் செய்திகளைக் கூறுகிறது. இந்நூல் ஐந்திலக்கணங்களையும் ஒன்றாகக் கூறும் தொல்காப்பிய முறையிலிருந்து வேறுபட்டு, பொருளிலக்கணத்தில் அகப்பொருளை மட்டும் விளக்கும் தனி இலக்கண நூலாகத் திகழ்கிறது. அகப்பொருள் இலக்கணத்திலும்,

**"முற்படப் புணராச் சொல்லின் மையிற்**

**கற்பெனப்படுவது களவின் வழித்தே"**
இறையனார் களவியல் - 15

என்று களவிற்குச் சிறப்பிடம் கொடுத்து, அதனையே அதிகமாக விளக்கியுள்ளதால் இறையனார் களவியல் என்னும் பெயரைப் பெற்றது. இறையனாரகப்பொருளும் அதன் உரையும் அகப்பொருள் இலக்கணத்தில் பல புதிய மாற்றங்களைக் சுட்டிக் காட்டியுள் என. அகப்பொருளை முழுவதுமாக விளக்கும் தொல்காப்பியம் திணைகளை ஏழாகப் பகுத்து, அவற்றிற்குரிய முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள்கள் இவை என்பதை,

**“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**

**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**

**காமக் கூட்டம் காணும் காலை**

**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**

**துறை அமை நல் யாழ்த் துணைமையோர்**
**இயல்பே”** (தொல். பொ. நூல் -01)

என்னும் நூற்பாவின் வழிகளவு, கற்பு ஆகிய பொருண்மைகளில் கூற்றுகளின் அடிப்படை யில் அகப்பொருள் இலக்கணத்தைக் கூறுகிறது. இறையனார் அகப்பொருள் திணை பகுப்புக் கூறாமல்,

**"அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது**

**அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்**

**கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்"**
(இறையனார் களவியல்-01)

என்று இறையனார் களவியலில் அன்பின் ஐந்திணையைப் பெயரளவிற்கு விளக்கி விட்டுக் களவியல் மற்றும் கற்பியல் ஆகிய பொருண்மைகளுக்கே முக்கியத்துவம் அளிக்கிறது. அதன் நிகழ்வுகளில் அடிப்படை யில் துறைகளாகவும் கிளவித் தொகைகளாக வும் காட்டி அகப்பொருள் இலக்கணம் கூறியுள்ளது. இந்நூலில் கைக்கிளை பெருந் திணை பற்றிய விளக்கம் கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். களவியல் கூறாமல் விடுத்த ஐந்திணை அதற்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களை இந்நூலின் உரை விரிவாக விளக்கி அவ்விடத்தைப் பூர்த்தி செய்துள்ளது. மேலும் தொல்காப்பியம் கருப்பொருட்களை எட்டு எனக் கூறுகிறது. இறையனார் களவியல் கருப்பொருட்களை 14 எனக் கூறியுள்ளது. களவியல் எனும் கைகோளில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற் கூட்டம், பகற்குறி, இரவுக்குறி, அல்ல குறி, உடன்போக்கு, அறத்தொடு நிற்றல், வரைவுக் கடாதல் போன்ற துறைகளை விளக்க, அதன் உரை மேலும் பல கிளவித் தொகைகளாக்கி விளக்குகின்றது. களவுக்குரிய காலத்தினை ,

**"களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம**

**திங்கள் இரண்டின் அகமென மொழிப "**
(இறையனார் களவியல் -32)

என்ற சூத்திரத்தின் வழி களவு காலத்தினை இறையனார் வரையறுக்கிறார். இது தொல்காப்பியத்தில் கூறப்பெறாத செய்தி என்பது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியம் இவ்வாறு களவு கற்பில் முடிய, இரண்டு மாதத்தைக் கால எல்லையாக வரையறை தராத போது களவியல் காலச் சூழலுக்கேற்ப கருத்தியல் மாற்றத்திற்கேற்ப இந்த வரையறை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியர் அகத்திணையியலில் பிரிவின் வகைகளை ஐந்தாகக் கூற, இறையனார் களவியலோ கற்பியலில் பிரிவை ஆறு என வகைப்படுத்தி உரைக்கின்றது. இதனை,

**“ஓதல் காவல் பகைதணி வினையே**

**வேந்தர்க்(கு) உற்றுழி பொருள்பிணி**
**பரத்தைஎன்(று)**

**ஆங்க ஆறே அவ்வயின் பிரிவே”**
(இறையனால் களவியலுரை - 35)

என்ற நூற்பாவில் களவியல் நூலாசிரியர் காவல் பிரிவைப் புதிதாக இணைத்துக் கூறுகின்றார். பிரிவுக்கு உரியோரை, நால்வகை வருணத்தாரைத் தொல்காப்பியர் உயர்ந்தோர், ஏனோர் என்று வகைப்படுத்த, இறையனார் களவியலோ இதே வகையில் வகைப்படுத்தினாலும் ஒருபடி மேல்சென்று உயர்ந்தோர், இழிந்தோர் (இறை.நூ.39) என வரையறைப்படுத்துகின்றது.

தொல்காப்பியத்தில் தோழி தலைவனை அழைக்கும் போது, 'நீ வா' (தொல். பொருள். 16) என்று கூறுதலும், இறையனார் களவியல் தோழியோ தலைவனை 'நீ வருக' (இறை. களவு. 30) என்று கூறுதலை யும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இறையனார் களவியல் காலத்தில் தலைவனுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

கற்பியல் எனும் கைகோளினை விளக்கும் போது, பிரிவு ஆறு எனக் கூறி அதனையே மிகுதியும் விளக்கியுள்ளது. இந்நூலில் அகமாந்தர்கள் பற்றிய விரிவான இலக்கணக் கோட்பாடு இல்லை. இருப்பினும் கிழவன், கிழத்தி, தோழி, தாய், தந்தை, பரத்தை முதலான அகமாந்தர்கள் துறைக்குரிய கிழத்தி, தோழி, தாய், தந்தை, பரத்தை முதலான அகமாந்தர்கள் துறைக்குரிய கிளவித் தொகைகளைக் கூறும் இடங்களில் சுட்டப்பெறுகின்றனர். தலைவன், தலைவி, வாயில்கள் ஆகியோருக்குரிய கூற்று மரபுகளையும் கூற்றுக்குரிமை இல்லாதவரை யும் தொல்காப்பியத்தை ஒட்டி விரித்துக் கூறுகிறது. கேட்போர் பற்றிய செய்திக்குறிப்பு

ஓரிடத்தில் மட்டும் இடம் பெற்றுள்ளது. மேலும்,

**"திணையே கைகோள் கூற்றே கேட்போர்**

**இடனே கால எச்சம் மெய்ப்பாடு**

**பயனே கோளென் றாங்கப் பத்தே**

**அகன்ஐந் திணையும் உரைத்தல் ஆறே"**

(அகப்பொருள் விளக்கம் நூற்பா -53)

எனத் தொல்காப்பியம் அகத்திற்கும், புறத்திற்கும் பொதுவாகக் கூறிய செய்யுளு றுப்புகளை இறையனாரகப்பொருள் அன்பின் ஐந்திணைக்கு மட்டும் உரியதாக்கிக் கூறுகின்றது. தொல்காப்பியம் அகப் பொருளைக் கூற்றுகளின் அடிப்படையில் விளக்க, இறையனாரகப்பொருள் நூலில் நிகழ்ச்சிகளின் அடிப்படையில் துறைகளாகக் காணப்படுகிறது. அகப்பொருள் நிகழ்ச்சிகள் பலவும் துறைகளாகப் பேசப்பட்டாலும் அவை அகமாந்தர் கூற்றுகளாகவே அமைந்துள்ளன. இதன் உரையாசிரியர் நக்கீரர் துறைகளையும், கூற்றுகளையும் மேலும் பலதுறைகளாகவும், கிளவித்தொகை களாகவும் விரிவுபடுத்தி நிரல்படுத்திக் கோவையாக நாடகப் பின்னணியில் அகப்பொருள் மரபுகளைக் கூறியுள்ளார். இவற்றில் ஒரு துறைக்கும், மற்றொரு துறைக்கும் ஒரு கூற்றுக்கும், மற்றொரு கூற்றுக்கும் இயைபு காணப்படுகிறது. இவற்றிற்குப் பாண்டிக்கோவைப் பாடல்கள் இயைபு காணப்படுகிறது. இவற்றிற்குப் பாண்டிக்கோவைப் பாடல்கள் மேற்கோள் களாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இறையனார் களவியல், அதன் உரை, பாண்டிக்கோவை ஆகிய மூன்றும் கோவை இலக்கண, இலக்கியங்கள் உருவாக அடிப்படையாக அமைந்துள்ளன.

### இறையனார் பார்வையில் களவியல்

இறையனார் களவியலின் நூலின் முதல் இயலான களவியல் பகுதியின் அமைப்பு குறித்து, அவற்றுள் களவு, முப்பத்தி மூன்று நூற்பாக்களால் விரிவாகச் சொல்லப் பட்டுள்ளது. இதில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற் கூட்டம் ஆகிய நான்கு வகைகளும் உள்ளன. இவற்றில் தோழியிற் கூட்டத்தில் மதியுடம்படுதல், முன்னுறவுணர்தல், குறையுறவுணர்தல், இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் முதலியன கூறப் பட்டுள்ளன. இவற்றுள் முன்னுறவுணர்தல் கிளவிகள் விரித்துக் கூறப்பட்டுள்ளன. அடுத்து அறத்தொடு நிற்றல், களவினுள் இடையீடு, பகற்குறி, இரவுக்குறி, அலர், வரைவுகடாதல் முதலியன சொல்லப் பட்டுள்ளன. என்னும் கூற்று களவியல் இயலின் அமைப்பு குறித்து விளக்கி நிற்கிறது. களவியல் அடுத்து கற்பியல் அமைப்பினைக் குறித்து, "இறையனார் களவியலில், கற்பியலில் பெரும்பகுதி பிரிவு பற்றியும், மற்ற பகுதி ஊடல், வாயில்கள் பற்றியும் உள்ளமையைக் காணலாம். ஆகவே, இறையனார் களவியல் நூலாசிரியர் கற்பில் பிரிவுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கின்றார் மேற்காணும் கூற்றின் மூலம் இரா. சீனிவாசனது கூறுவதனை அறிய முடிகிறது.

### தொல்காப்பிய அகத்திணை

தொல்காப்பியர் அகத்திற்கும் புறத்திற்கும் உரிய செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கு என்று வகைப்படுத்த, இறையனார் களவியலோ அதில் பத்தினை மட்டும் அகனைந்திணைக்கு உரிய உறுப்புகளாக வகைப்படுத்துகின்றது. தொல்காப்பியர் கூறிய முன்னம் என்பதற்குப் பதிலாக இங்கு கோள் என்னும் உறுப்பு இடம்பெற்றுள்ளது. இதனை,

**"திணையே கைகோள் கூற்றே கேட்போர்**

**இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு**

**பயனே கோளென் றாங்கப் பத்தே**

**அகனைந் திணையும் உரைத்தல் ஆறே"**

இறையனால் களவியலுரை - 56

"தொல்காப்பியர் விரித்த அகத்திணை புறத் திணை ஆகியவற்றில் ஏழு திணைகளுக்கும் உரிய செய்யுளுறுப்புகளுள் சில, களவியலார் காலத்தில் பொருள் சுருக்கம் பெற்று அன்பின் ஐந்திணையை மட்டும் குறிக்கத் தொடங்கிய நிலையை அறியலாம்." (த.வசந்தாள்: 1990:26) என்னும் கூற்றின் வழியாக அறியமுடிகிறது. தொல் காப்பியம் பரத்தைக்கான வாயில்கள், நால்வர்க்கும் உரியது என்று கூற, இறையனார் களவியலோ "காதற் பரத்தை எல்லார்க்கும் உரித்தே" (இறை. கற்பு. 40) என்று வரையறுக்கின்றது. களவியல் உரை காதற்பரத்தையை மட்டும் நால்வர்க்கும் உரிய என்று கூறுகின்றது.

தொல்காப்பியத்தின் முழு உரை, காலத்தால் முந்தைய உரை எனத் தனிச்சிறப்புகளைக் கொண்ட இளம்பூரணர் உரை, இறையனார் களவியல் நூல் மற்றும் உரை தோன்றியதற் குப் பிறகே எழுதப்பட்ட உரையாக அமைகின்றது. இளம்பூரணர் தொல்காப்பியத் திற்கு உரை எழுதும்போது தனி அகப் பொருள் இலக்கண நூலான களவியலைப் பொருளதிகாரத்தில் ஓரிடத்தில் மட்டுமே அறிமுகப்படுத்திச் சென்றுள்ளார். தொல்க. த காரக களவியலில் 'நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்' என்னும் இருபத்து நான்காவது நூற்பா களவில் தோழி கூற்று நிகழும் இடங்களை வரையறைப்படுத்துகின் றது. இந்நூற்பாவில் தோழி கூற்று நிகழுமிடம் ஒவ்வொன்றிற்கும் இளம்பூரணர்

பல இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டுகின்றார். அதில் குறையுற உணர்தல் நிகழ்ந்துவிட்டால் மதியுடன்பாடு நிகழாது என்று கூற வந்த இளம்பூரணர் இறையார் களவியலின்,

**இரந்து குறையுறாது கிழவியுந் தோழியும்**
**ஒருங்குதலைப் பெய்த செவ்வி நோக்கிப்**
**பதியும் பெயரும் பிறவும் வினாஅய்ப்**
**புதுவோன் போலப் பொருந்துபு கிளந்து**
**மதியுடம் படுத்தற்கும் உரியன் என்ப**

இறையனால் களவியலுரை - 06

என்னும் நூற்பாவினை மேற்கோளாகக் காட்டி, அதன்கீழ் "என்பதனாற் குறையுற உணர்தல் நிகழ்ந்துழி இது நிகழாதென்று கொள்க" என்று குறிப்பிட்டுச் செல்கின்றார். ஒரு கூற்றைத் தெளிவுபடுத்தவே இளம்பூரணர் களவியல் நூற்பாவினை மேற்கோளாகக் காட்டிச் சென்றுள்ளார். இந்த ஓரிடம் தவிர்த்துக் களவியல் உரையின் பாயிரப் பகுதியையோ, களவியலின் பிற நூற்பாக்களையோ, களவியலின் சிந்தனைகளையோ, உரையாசிரியரின் உரை நுட்பங்களையோ இளம்பூரணர் எங்கும் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இறையனார் அகத்திணை

இறையனார் களவியல் நூலின் நூற்பா ஒன்றை முழுமையாகவும் ஒரு நூற்பாவின் சில அடிகளையும் பேராசிரியர் தாம் உரை எழுதிய பொருளதிகாரப் பின்னான்கு இயல்களில் செய்யுளியல் மற்றும் மரபியலில் பயன்படுத்தியுள்ளார். தொல்காப்பிய மரபியலில் நூலின் இலக்கணம் கூறும் நூற்பாவான,

**ஒத்த சூத்திரம் உரைப்பிற் காண்டிகை**
(தொல்காப்பியம் மரபியல் நூற்பா–100)

என்பதற்கு விளக்கம் கூறவந்த பேராசிரியர் களவியல் நூலிற்குப் பாயிரமில்லை. அதற்குப் பதிலாக நூலின் முதல் நூற்பாவே நின்று இருவகைப் பாயிர உரையும் எழுதுவதற்குத்துணையாக நின்றது என்று குறிப்பிடுகின்றார். களவியலின் முதல் நூற்பாவாகிய,

**அன்பின் ஐந்திணைக் களவெனப்படுவ**
**அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்**
**கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்**

(இறை. நூ.1)

என்னும் நூற்பாவினை எடுத்துக்காட்டி அதன் கீழ் “என்பது, பாயிரமின்றித் தானே நூன் முகத்து நின்று இருவகைப் பாயிரவுரையும் பெய்து உரைக்கப்பட்டது" என்று விளக்கம் அளித்துச் சென்றுள்ளார்.

## முடிவுரை

தொல்காப்பியரும் இறையனாரும் அகத் திணை இயலை குறிப்பிட்டுள்ளார். தொல் காப்பியர் அகமரபை நான்கு இயல்களில் வழி விரித்துக்கூறியுள்ளார். இறையனார் ஆசிரியர் களவியல் கற்பியல் என்னும் இரண்டு இயல்களில் அறுபது சூத்திரங் களின் வழி அகமரபை விளக்கியுள்ளார். இருபெரு இலக்கண நூல்களுக்கு இடையே கால வேறுபாடு இருந்தாலும் ஒரு சில நூற்பாக்களில் ஒத்த தன்மையுடைய கருத்தக்களையே கூறியுள்ளனர். சில இடங்களில் மட்டுமே வேறுபாடு இருப்பின் அக்கால மரபிற்கு ஏற்றாற் போல அமைவதையும் காணலாம். இறையனார் கற்பை விளக்குவதற்கு களவின் வழியே கற்பு என்பதையே நிலைநாட்டுகிறார். இதனை தொல்காப்பியர் களவு, கற்பு என்ற தனி நிலையையே முன்னிறுத்தி செல்வதனையே காணமுடிகின்றது.

## துணை நூற்பட்டியல்

1. இரா.ஜானகி - இறையனார் களவியல் உரை: களவியல் காட்டும் அகமரபும் உரைமரபும் பரிசல் வெளியீடு – 2021
2. நக்கீரர் உரை - இறையனார் களவியல் உரை, திருநெல்வேலித் தென்னித்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி-6. சென்னை-1. - 1964
3. ச.திருஞானசம்பந்தம் - அகப்பொருள் விளக்கம் கதிர் பதிப்பகம் - 2009
4. இளம்பூரணர் உரை - தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம் - 2019
5. ச.திருஞானசம்பந்தர் உரை - தொல்காப்பியம் பொருளதிகாரம், கதிர் பதிப்பகம்
6. வெள்ளைவாரனார் – தொல்காப்பிய உரைவளம் – 1983
7. ஆ.சிவலிங்கனார் - தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல் உரைவளம் – 1995
8. பாவலரேறு ச. பாலசுந்தரம் – தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை அகத்திணையியல் & புறத்திணையில், தாமரை தாமரை வெளியிட்டகம் (தஞ்சாவூர்) – 1995
9. புலவர் குழந்தை - தொல்காப்பியம் பொருளதிகாரம்,சோழன் பதிப்பகம் - 2024